

https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

05TH MAY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 78

# கடமை நேரத்தில் வெள்ளாமை வெட்டும் பொலிஸார்

சொந்த ஊர்களில் பணிபுரியும் பொலிஸார், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கடமை நேரங்களில் முழு நேரத் தொழிலாக வெள்ளாமை வெட்டுகிறார்கள் என்றும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றும் மிகுதி நேரத்தில்தான் பொலிஸ் கடமையைச் செய்கிறார்கள் என்றும் பொலிஸ் தலைமையக தகவல்கள் கூறுகின்றன.

முழு நேர தொழிலாக வர்த்தகத்திலும் பகுதி நேர தொழிலாக பொலிஸ் சேவையிலும் இவர்கள் ஈடுபடுவது விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனால் வடமத்திய மாகாணத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் தலைமையில் அமைக்கப்பட்ட விசேட குழுவால் நடப்பட்ட விசாரணையிலேயே மேற்படி விவகாரம் தெரிய வந்துள்ளது.

02 ▶

## வாகன பெர்மிட் கேட்ட எம்பிக்களின் பெயர்களை வெளிப்படுத்துக



தங்களுக்கு வாகன பெர்மிட் வழங்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ள எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி எம்பிக்களின் பெயர்களை அம்பலப்படுத்துமாறு எதிர்க்கட்சி எம்பிக்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமக்கு வாகன பெர்மிட் வழங்குமாறு கோரி சில எம்பிக்கள் சபாநாயகரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால்,நாட்டின் பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான சலுகைகள் எம்பிக்களுக்கு வழங்கக்கூடாது என்று பல எம்பிக்கள் சபாநாயகரிடம் கோரியுள்ளனர்.

02 ▶

## சபாநாயகரின் வாகனத்தைத் திருத்துவதற்கு 2.5 கோடி ரூபா



தான் பாவித்து வரும் வாகனம் 5 வருடம் பழையது என்பதால் அதைத் திருத்துவதற்கு 2.5 கோடி ரூபா தேவைப்படுகிறது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபாயவர்தன வாகன பெர்மிட் கேட்ட எம்பிக்களிடம் கூறியுள்ளார்.

இதைத் திருத்துவதைவிட புதிய வாகனம் ஒன்றை வாங்குவது நல்லது என்று கூறியுள்ள அவர் ,தான் இப்போது பழைய வாகனத்தையே பாவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியிடம் பணம்,பார் பெர்மிட் வாங்கிய எதிர்க்கட்சி எம்பிக்களுக்கு எதிராக நடவடிக்கை

அபிவிருத்தி வேலைகளுக்காக ஜனாதிபதியிடம் நிதியைப் பெற்ற மற்றும் சாராய அனுமதி பத்திரம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அந்த கட்சி எம்பிக்கள் கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும்,அவர்கள் ஜனாதிபதியிடம் வாகன பெர்மிட் கோரியுள்ளமை தொடர்பிலும் விசாரணை நடத்துமாறு அவர்கள் அழுத்தம் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதியிடம் இவ்வாறு நிதி பெறுவதையோ சாராய அனுமதி பத்திரம் பெறுவதையோ எமது கட்சி விரும்பவில்லை.

கட்சியின் நிலைப்பாட்டை மீறி நிதி,பார் பெர்மிட் பெற்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு எம்பிக்களுக்கு வாகன பெர்மிட் வழங்கக்கூடாது என்றும் நாம் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கூறியுள்ளோம் என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல எம்பி தெரிவித்துள்ளார்.



புதுசுடர்
www.puthusudar.lk
2024 MAY 05 - SUNDAY

# எம்பிக்களின் சுகபோக வாழ்க்கை

அரசியல் என்பது மக்கள் சேவை என்ற பதத்தில் இருந்து மாறுபட்டு வர்த்தகம்,சுகபோகம்,என்ற பதங்களுக்கு மாறி ரொம்ப காலமாகிவிட்டது.

இன்று 90 வீதத்துக்கும் அதிகமானவர்கள் அரசியலுக்கு வருவதே பணம் ஈட்டுவதற்கே அன்றி வேறெதெற்கும் இல்லை. மக்கள் சேவை என்பதெல்லாம் வெறும் பேச்சுதான்.அடுத்த தேர்தலில் வெல்வதற்காக மாத்திரம் சொற்ப சேவைகளை செய்துவிட்டு இவர்கள் கோடி கணக்கில் சம்பாதிக்கிறார்கள்.

அரசியலுக்குள் நுழைகின்றபோது இருக்கும் அவர்களது பொருளாதார நிலைமை நுழைந்த பின் ரொக்கட் வேகத்தில் அதிகரிக்கிறது.

மாடமாளிகைகள்,சொகுசு வாகனங்கள்,பெரிய பெரிய வர்த்தகங்கள்,போதைப் பொருள் வியாபாரம் உள்ளிட்ட சமூக விரோத செயல்கள்,வெளிநாடுகளில் பணம் பதுக்கல் என இவர்கள் வேறு லெவலுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் வளர்ச்சியை கண்முன்னே பார்த்துக்கொண்டிருக்கும் இவர்களுக்கு வாக்களித்த மக்கள்கூட இதுபற்றி யோசிப்பதில்லைஇதைக் கேள்விக்கு உட்படுத்துவதுமில்லை.மீண்டும் மீண்டும் அவர்களையே ஆதரிக்கிறார்கள்.

இந்த தைரியத்தில்தான் இவர்கள் தொடர்ந்து இவர்களின் ஆட்டத்தை ஆடுகிறார்கள். மக்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்தையும் சுருட்டுகிறார்கள்.

தற்போதைய பொருளாதார நிலைமையிலும்கூட அவர்கள் திருந்துவதாக இல்லை.வாகன பெர்மிட் கேட்கிறார்கள்,பார் பெர்மிட் கேட்கிறார்கள்,சம்பளத்தைக் கூட்டிக் கேட்கிறார்கள்.இன்னும் ஏதேதோ சலுகைகள் கேட்கிறார்கள்.

அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்காக அவர்கள் எதையும் கேட்பதில்லை. தங்களுக்காக மாத்திரமே எல்லாவற்றையும் கோருகிறார்கள்.

பார் பெர்மிட் பெற்றுத் தருவதாக கூறி சில எம்பிக்கள் சில வியாபாரிகளிடம் லட்ச கணக்கில் பணம் பெற்றுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அந்த பெர்மிட் கிடைப்பதற்குத் தாமதமானதால் பணம் கொடுத்த வியாபாரிகள் நெருக்குதல் கொடுத்து வரும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சில எம்பிக்கள் பார் பெர்மிட்டை பெற்றும் உள்ளனர்.சில எம்பிக்கள் தீர்வையற்ற வாகன இறக்குமதி பெர்மிட்டை கோரி வருகின்றனர்.இது இப்போது பெரும் பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்த பெர்மிட் வழங்கக்கூடாது என்று சில எம்பிக்கள் கூறி வருகின்றனர்.

இந்த வாகன பெர்மிட் எதற்காக? மக்களுக்கு சேவை செய்வதற்காகவா ? இல்லை. வியாபாரிகளிடம் அதை விற்று கோடிக் கணக்கில் பணம் பெறுவதற்காகவே அன்றி வேறு எதற்காகவும் இல்லை. அந்தப் பணம் மக்களுக்கு செலவிடப்படப் போவதுமில்லை.

மக்கள் பொருளாதாரரீதியில் துன்பப்படும் இந்த நிலையில்கூட,தங்களின் சுகபோக வாழ்க்கை மீதே கவனம் செலுத்துகிறார்கள் இந்த எம்பிக்கள்.இது அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம்.

மக்கள் இதைப்பற்றி யோசிக்காதவரை ஒருபோதும் இந்த அரசியல்வாதிகள் திருந்தாய் போவதில்லை.




## கடமை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**இந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, இவர்களுக்கு வேறு இடங்களுக்கு இடமாற்றம் வழங்குமாறு இந்தக் குழு பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்கியுள்ள விசாரணை அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.**

## வாகன...

முன்பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொள்ளாது வாகன பெர்மிட் கேட்ட எம்பிக்களின் பெயர்களை வெளிப்படுத்துமாறு அந்த எம்பிக்கள் இப்போது சபாநாயகரிடம் கோரியுள்ளனர்.






# 13 முழுமையாக அமுல்: நிறைவேற்றப்படாத வாக்குறுதி....



இலங்கையின் அரசியல் தளத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம்-அரசியல் தீர்வு என்பது தவிர்க்க முடியாத பேசு பொருளாகும். தேர்தல் காலங்களில் வாக்குகளை அபகரிக்கப் பாவிக்கப்படும் முக்கிய கருவியாகும்.

13இற்கு எதிரான நிலைப்பாட்டை-பிரசாரத்தை வைத்து சிங்கள மக்களிடமும் ஆதரவான பிரசாரத்தை வைத்து தமிழ் மக்களிடமும் காலாகாலமாக வாக்குகளை அபகரித்து வருகிறார்கள் அரசியல்வாதிகள்.

எதிர்வருகின்ற தேர்தலிலும் இதைத் தவிர்க்க முடியாது. ஆளுங்கட்சி ,எதிர்க்கட்சி,தமிழ் கட்சிகள் என எல்லோரும் இதைத் தூக்கிப் பிடிக்கவே செய்கிறார்கள்.

13 ஐ முழுமையாக அமுல்ப்படுத்துவேன் என்று ஜனாதிபதி ஒருபுறம் கூறி வருகிறார். அதையே நானும் முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சஜித் பிரேமதாசாவும் மே தினக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா போய் வந்ததும் இந்தச் பேச்சு அதிகமானது. இலங்கைக்கு இந்தியா எந்தவோர் உதவியை செய்வதற்கு முன்வந்தாலும் அந்நாடு முதலில் விதிக்கும் நிபந்தனையாக இருப்பது அல்லது கோரிக்கையாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

அது இந்தியாவின் தலையீட்டால் கொண்டுவரப்பட்டது என்பதால் அந்த முறைமை இலங்கையில் இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அந்த முறைமையால் வடக்கு-கிழக்கு பிரச்சினை தீருகிறதா இல்லையா என்பதை விட தனது ஆதிக்கத்துக்கு சான்றாக 13 என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அந்த வகையில் இந்தியா சென்ற ஜனாதிபதியிடம் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொடுத்துள்ளார்.

அதனால் இந்தியாவில் இருந்து திரும்பிய வேகத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டினார். வடக்கு-கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களைத் தவிர எல்லாவற்றையும் வழங்கப் போவதாக அறிவித்தார்.

இதை நடைமுறைப்படுத்தும்போது தெற்கில் இருந்து-சிங்கள மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் அதை சமாளிப்பதற்காக-அதில் இருந்து தப்புவதற்காக ரணில் 13 இன் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துள்ளார்.

13 என்பது ஜனாதிபதியுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்டது. அதை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்று நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று கூறி ஜனாதிபதி பந்தை அந்தப் பக்கம் திரும்பியுள்ளார்.

இது தொடர்பில்-13 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் அவர்களின் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசமும் வழங்கினார் ஜனாதிபதி. அந்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறினார்..

ஒருவேளை, நாடாளுமன்றத்துக்குள் 13 இற்கு எதிரான நிலைப்பாடு அதிகமாக இருந்தால் நாடாளுமன்றத்தின் தலையில் போட்டுவிட்டு தமிழ் மக்களிடமிருந்து ரணில் தப்பிவிடுவார்.

ஒருவேளை,13இற்கு ஆதரவான நிலைப்பாடு அதிகமாக இருந்தால்-அதை சிங்கள மக்கள் எதிர்த்தால் அதையும் நாடாளுமன்றின் தலையில் போட்டுவிட்டு சிங்கள மக்களிடமிருந்து தப்பிவிடுவார்.

இந்தியாவுக்கும் இதே வேலையைச் செய்வார். இதனால் 13 இன் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. 13 அமுல்படுத்தப்படுமா ? செயலற்றுக் கிடக்கும் மாகாண சபைகளை மீண்டும் இயக்குவதற்காக தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்விகள் இப்போது எல்லோரது மனங்களிலும் எழுந்துள்ளன.

உண்மையில் 13 ரணிலுக்கு இப்போது தேவைப்படுவது வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொள்வதற்காகத்தான். இல்லையென்றால் அவரும் இதுபற்றிப் பேசமாட்டார்.

பொருளாதாரரீதியில் நாடு வீழ்ந்து கிடக்கும் இந்த நிலையில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கே கவனம் செலுத்த வேண்டும்இப்போது அதிகாரப் பகிர்வுபற்றியெல்லாம் பேச முடியாது என்று கூறிவிட்டு ரணில் சென்றிருப்பார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் அவருக்கு கடும் சவாலாக அமைந்துள்ளதால் வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகள் அவருக்கு கட்டாயம் தேவை. அதனால்தான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசியல் தீர்வுபற்றி பேசுகிறார். அதற்கான செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளார்.

இருந்தும்,இது ஒரு நாடகம். ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை குறிவைத்த செயற்பாடு என்று உணர்ந்ததால் கஜேந்திரன் பொன்னம்பலத்தின் கட் சி இந்த வேலைத்திட்டத்திற்குள் வரவில்லை. அவர்கள் விலகி நிற்கிறார்கள்.

அதேபோல்தான் மொட்டு கட்சியும். அவர்களும் 13 அமுல்படுத்துவத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்கு இதை அமுல்படுத்தும் அதிகாரம் இல்லை என்கிறார்கள்.

மறுபுறம்,சஜித் பிரேமதாசாவும் தமிழர்களிடம் இருந்து வாக்குகளை பெறுவதற்காக இதே 13ஐ கையில் எடுத்துள்ளார். அதை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று கூறியுள்ளார்.

முழுமை என்பதன் அர்த்தம் காணி,பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கிய 13 ஆகும். இதையா சஜித் வழங்குவார் என்று இப்போது கேள்வி எழுகிறது.

13 முழுமையாக அமுல் என்பது நிறைவேற்றப்படாத வாக்குறுதி என்பதில் சந்தேகம் இல்லை. சஜித் அல்ல யார் வாந்தாலும் 13ஐ முழுமையாக அமுல்படுத்தமாட்டார்கள் என்பது முழு நாடுமே அறிந்த ஒன்று.


அதில் இருக்கின்ற காணி,பொலிஸ் அதிகாரங்கள்தான் இதற்கு காரணம். சிங்கள மக்கள் இதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டார்கள்.

வேண்டுமானால், இப்போது நடைமுறையில் இருக்கின்ற 13 ஐ-மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்திக்கொண்டு போகலாம். அதில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சமமாக பங்குகொள்வதால் அதை சிங்களவர்கள் எதிர்க்கப்போவதில்லை.

அதைத் தாண்டி வடக்கு-கிழக்கிற்கு என்று விசேடமாக காணி,பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதுதான் பிரச்சினை. ஆகவே,13 ஐ முழுமையாக அமுல்படுத்துவேன் என்ற வாக்குறுதி என்றும்போல் நிறைவேற்றப்படாத சாதாரண தேர்தல் வாக்குறுதியே அன்றி வேறில்லை

# ஆட்டம் காணும் மஹிந்தவின் அரசியல் எதிர்காலம்

தொடர் - 05



சின்னத்தம்பி குருபரன்

மஹிந்தவின் தோல்வி 2014 ஊவா மகாண சபைத் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்டது.இதனைக் கருத்தில் கொண்டு தனக்குரிய பதவிக் காலம் இருக்கையில் தமது பலத்தை நாடி பிடித்துப் பார்ப்பதற்காக பலரின் அறிவுறுத்தல்களுக்குச் செவி மடுக்காமல் சர்வாதிகாரப் போக்கில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை முன்கூட்டியே தீர்மானித்தமை தொடர்பாகக் கட்சிக்குள்ளேயே பல விமர்சனனங்கள், புகைச்சல்கள் வெளிவந்தன.

தன்னோடு கட்சியில் இருந்து செயற்பட்ட கட்சியின் மூத்த உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக நியமிக்கப்பட்டமை பெரும் சவாலாக அமைந்தது.அது அரசியலில் மஹிந்த எதிர்பார்க்காத திருப்பமாகவும் அமைந்திருந்தது.



சிங்கள சிறுபான்மைக் கட்சிகளும் பெரும்பாலான சிறுபான்மையினர் கட்சிகளும் மைத்திரியையே ஆதரித்தன. மைத்திரி வெற்றியும் பெற்றார்.

மஹிந்த ராஜபக்ச 2015 ஜனாதிபதித் தேர்தலிலி படுதோல்வி அடையவில்லை என்பதே உண்மையாகும். அவரையும் அவரது செயற்பாடுகளையும் இனவாதப் பிரச்சாரத்தினையும் நேசித்த சிங்கள மக்கள் அவருக்கே வாக்களித்திருந்தார்கள்.

சிறுபான்மையினர் 20 வீதத்திலும் குறைவானவர்களே அவருக்கு வாக்களித்தனர்.அதுதான் அவருக்குத் தோல்வியாக அமைந்தது. வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். யாப்பின்படி ரனில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

நல்லாட்சிக்கான புதிய மந்திரி சபையில் கட்சி பேதமின்றி மஹிந்தவுடன் முரண்பட்டு வெளியேறிவந்த பலருக்கும் அமைச்சு, மற்றும் ராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.100 நாள் வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுத் தேர்தல் பிற்போடப்பட்டு தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான பேச்சுவார்த்தையின் பின்னர் 2015 ஜுலையில் தேர்தல் நடத்தப்பட்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

இவ்வரசாங்கத்தில் ராஜபக்சக்களும் அவர்களின் தீவிர அரசியல் விசுவாசிகளைத் தவிர பலர் அமைச்சர்களாக-, இராஜாங்க அமைச்சர்களாகப் பதவி ஏற்றனர்.

எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இது பலரின் விமர்சனங்களுக்கும் உட்பட்டிருந்தது.

பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தனது மாவட்டமான ஹம்பாந்தோட்டையில் போட்டியிடாமல் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு இலங்கையில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.

பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றமையினால் மஹிந்த எதிர்பார்த்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி அவருக்கு வழங்கப்படவில்லை தாம் அரசாங்கத்தோடு இணைந்து நல்லாட்சியில் பங்குகொண்டபோதிலும் ஆட்சியாளர்களுடன் ஒட்டாமல் தனக்கு விசுவாசமான 56 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தனியாகவே செயற்பட்டார்.

தனியாகச் செயற்பட்ட எல்லோரும் ஒன்று சேர்ந்து 2016 இல் பொதுஜனப் பேரமுன என்ற பெயரில் புதுக் கட்சியை ஆரம்பித்து 2016, 2017 ஊள்ளூராட்சிச் சபைகள் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றனர்.

இக்காலப் பகுதியில் பிரதம மந்திரி ரனில் விக்கிரமசிங்காவின் நரித்தந்திர சாணக்கியத்துக்கும் ஜனாதிபதி மைத்திரியின் சாணக்கியத்துக்கும் இடையில் பனிப்போர் நடந்து கொண்டிருந்தது.

அதனைச் சாதகமாகப் பயன்படுத்திய மஹிந்த அணியினர் 65 வீதத்துக்கு மேற்பட்ட உள்ளூராட்சிச் சபைகளைக் கைப்பற்றினர்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே ஏற்பட்ட பனிப் போரினால் நடைமுறைப்படுத்த வேண்டிய பல அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்பட்டன. பல மில்லியன் டொலர் பெறுமதியான நிதி திட்டங்களும் பயன்படுத்தப்படாமல் திரும்பிச் சென்றன.

இதைப் பயன்படுத்தி நாட்டில் ஊழலும் மோசடிகளும் அதிகரித்தன.அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், ஆளுனர்கள்,அமைச்சுச் செயலாளர்கள், உயர் அதிகாரிகள் எல்லோரும் இரு பக்கமும் சார்ந்து நின்றமையினால். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தது.

பல செயலாளர்கள் அமைச்சர்களுக்குக் கட்டுப்படாமல் செயற்பட்டனர். பல மாகாண சபைகளும் உள்ளூராட்சி சபைகளும் ஆளுனர், முதலமைச்சர், மாநகர முதல்வர், தவிசாளர்களின் இஸ்டத்துக்குச் செயற்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகள் ஆட்சியாளர்கள்மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தின.

போதாக்குறைக்கு ரனில் விக்கிரமசிங்கமீது கொண்ட வெறுப்பினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் யாப்புக்கு முரணாக, சிறுபிள்ளைத்தனமாக மந்திரிசபையைக் கலைத்து மஹிந்தவைப் பிரதமராக்கிப் புதிய மந்திரி சபையை உருவாக்கினார்.

இது அரசியலிலும், மக்கள் மனங்களிலும் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தின.56 நாள் நீடித்த புதிய ஆட்சி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் ரத்துச் செய்யப்பட்டு மீண்டும் பிரதமராக ரனில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டதுடன் புதிய அமைச்சரவையும் தாபிக்கப்பட்டது.

இந்நடவடிக்கை இருவருக்கும் இடையிலான பனிப்போரின் உச்சத்தை வெளிப்படுத்தின.இது ஆட்சி கலையும்வரை தொடர்ந்து கொண்டே இருந்தது.

மைத்திரியின் கோமாளித்தனமான இந்நடவடிக்கையினை சர்வதேசம் உட்பட உள்நாட்டில் உள்ள ஊடகங்கள் தொடக்கம் சமூக ஊடகங்கள் வரை வெகுவாக விமர்சித்தன.

இது நாட்டின் அரசியல், பொருளாதார நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியதோடு மக்கள் மனங்களில் பெரும் எதிர்வினையை ஏற்படுத்திவிட்டது..

அத்தோடு 21-04-2019 அன்று கொழும்பு, தெகிவளை, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சஹ்ரான் குழுவினர் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நாட்டின் பாதுகாப்பு, அரசியல், பொருளாதாரம், இன நல்லுறவு ஆகியவற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது.

'பழம் நழுவிப் பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழுந்தது' போல் அச்சம்பவத்தை ராஜபக்ச அணியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.இதனை சந்தர்ப்பவாத அரசியலுக்காக ராஜபக்ச அணியினரும் உளவுத் துறையினர் சிலரும் சேர்ந்து சஹ்ரான் குழுவினரைப் பயன்படுத்திக் குண்டுத் தாக்குதலைச் மேற்கொண்டனர் என இன்னொரு சாராரும் குற்றம் சாட்டினர்.

நாட்டின் பாதுகாப்பு சீர்குலைந்ததன் காரணமாகவே சஹ்ரானின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்ததெனவும் தங்களின் ஆட்சிக் காலத்தில் இப்படியொரு சம்பவம் நடக்கவில்லை எனவும் புலிகளை அழித்து நாங்களே நாட்டில் அமைதியை ஏற்படுத்தினோம் எனவும் புலிப் பூச்சாண்டியைக் கிழப்பிவிட்டு பாராளுமன்றத்துக்குள்ளும் பொது வெளியிலும் முழங்கினர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் தணிடிக்கப்பட வேண்டும் என ஆக்ரோசமாகப் பேசினர். இவை ஆட்சியாளர்கள் தொடர்பான எதிர்வலைகளை ஏற்படுத்தின.

சஹ்ரான் குழுவினரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களும் சிங்களச் சிறுபான்மைக் கிறிஸ்தவர்களும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குண்டுத் தாக்குதலில் சிங்கள பௌத்த மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் நிலமை வேறாக மாறியிருந்திருக்கும். சிறுபான்மை மக்களும், சிறுபான்மைச் சிங்கள கிறிஸ்தவ மக்களும் பாதிக்கப்பட்டதனால் இன்றுவரையும் விசாரணைப் பூச்சாண்டி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க இதற்கும் 'உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு' ஒன்றினை நியமனம் செய்து காலத்தை இழுத்தடிப்பார் என்பதிலும் ஐயமில்லை.

தொடரும்...

## துப்பறிவாளன்

# சந்திரிகாவின் தனி வேட்பாளர்



சந்திரிகாவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சில நாட்களுக்கு முன் சந்திப்பொன்று இடம்பெற்றது.சந்திரிகாவுடன் நெருக்கமான சிலர் மாத்திரமே கலந்துகொண்டனர்.

பலர் விடயங்கள் பேசப்பட்டன. ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தனியாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றியும் பேசப்பட்டது. இதற்கு இன்னும் காலம் உள்ளது என்றாலும்,அதுபற்றி ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று சந்திரிகா கூறினார்.

இப்போதுள்ள ஜனாதிபதிக்கு ஆதரவது வழுங்குவதா ,இல்லையா என்று அங்கு கலந்துகொண்ட ஒருவர் சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பினார்.

இப்போதைய ஜனாதிபதியை மொட்டு கட்சி நிறுத்தப் போகிறது.மொட்டு கட்சி திருடர்கள் நிறைந்து கிடக்கும் கூடாரம்.அந்தக் கட்சி நிறுத்தும் ஒருவருக்கு எப்படி ஆதரவு வழங்குவது என்று மாறி கேள்வி எழுப்பினார் சந்திரிகா.



# இப்போது அந்த பேச்சு வேண்டாம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் சில நாட்களுக்கு முன் சந்திப்பொன்று இடம்பெற்றது.

சந்திப்பின் நோக்கம் முதலில் நடத்துவது ஜனாதிபதி தேர்தலா,நாடாளுமன்றத் தேர்தலா என்று பசில் அறிவதுதான்.

ஆனால், இந்தத் தடவையும் அதற்கான பதில் கிடைக்கவில்லை.

தேர்தலுக்கு காலம் உண்டு.இப்போது ஏன் அதைப்பற்றி பேச வேண்டும் என்று கூறிவிட்டார் ஜனாதிபதி.

இதற்கு பசிலின் கருத்தும் அப்படியே இருந்தது.எங்களது கட்சியின் நிலைப்பாடும் அப்படியே உள்ளது என்றார்.



# ஜனாதிபதிக்கு அழுத்தம்

ஒரு சிக்கலில் சிக்கியுள்ளார் அமைச்சர் விஜயதாசா ராஜபக்ச.

மொட்டு கட்சியின் எம்பியாக இருந்துகொண்டு -ரணிலின் அமைச்சராக இருந்துகொண்டு சிறிலங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டு ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படப் போகின்றமைதான் இந்த சிக்கலுக்கு காரணம்.

இதன் காரணமாக மொட்டு கட்சி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகி வருகிறது.

அதேபோல்,ஜனாதிபதியும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் சிலர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.



# கோத்தாவைப்போல் அனுரவையும்...

சஜித் பிரேமதாசாவும் அனுரகுமார திசாநாயாக்கவும் விவாதம் நடத்துவதுபற்றியே இப்போது அதிகம் பேசப்படுகிறது.

இதில் அதிகம் அக்கறை காட்டுவது சஜித் பிரேமதாஸாதான்.அந்த விவாதத்தின் ஊடாக அதிக மக்கள் செல்வாக்கை திரட்டலாம் என்று அவர் நம்புவதுதான் இதற்கு காரணம்.

2019 ஜனாதிபதி தேர்தலில் கோத்தா சஜித்தை விட அதிகா செல்வாக்குடன் திகழ்ந்தார்.

அவரை விவாதத்துக்கு அழைத்து செல்வாக்கை அதிகரித்துக்கொள்ளலாம் கோத்தாவின் செல்வாக்கை குறைத்துவிடலாம் என்று ஆசைப்பட்டு அன்று கோத்தாவை விவாதத்துக்கு அழைத்தார்.ஆனால்,அவர் செல்லவில்லை.இப்போது அதே திட்டத்தோடுதான் அனுரவையும் அழைக்கிறார்.

கோத்தாவைபோல் அல்ல அனுர.அனுரவுடன் விவாதம் நடத்துவது சஜித்துக்குத்தான் ஆபத்தாக அமையும் என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.



# மனக்கசப்பு தீர்ந்தது

நாமல் ராஜபக்ச மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டதை விரும்பாத அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,வெளிப்படையாகவே அதை விமர்சித்து வருகிறார்.

இதனால்,ஒரே கட்சிக்குள்ளேயே இருவரும் முட்டி மோதுகிறார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

இந்த நிலையில்,சில நாட்களுக்கு முன் இருவரும் சந்தித்துப் பேசி அவர்களின் மனக்கசப்பை நீக்கிக்கொண்டார்களாம்.

அது அம்பாறையில் இடம்பெற்ற மொட்டு கட்சி எம்பி வீரசிங்கவின் புது மனை புகுவிழாவில் கலந்துகொண்டு...

அவர்கள் இருவரும் கட்டித் தழுவி –புது வருட வாழ்த்துக்கள் கூறி –சிரித்துப் பேசி மகிழ்ந்தனராம்.



# நாமலுக்கு இன்ப அதிர்ச்சி

அந்த நிகழ்வு முடிந்ததும் கட்சி ஆதரவாளர்களுடன் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.கூட்டம் இடம்பெறும் இடத்துக்கு நாமல் சென்றபோது எங்கே அவருக்கு இன்ப அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

அது அன்றைய தினம் நாமலின் பிறந்த நாள். நாமலுக்கே தெரியாமல் கேக் வெட்டி பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார் வீரசிங்கம் எம்பி.

அந்த இன்ப அதிர்ச்சியோடு கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந்தார் நாமல்.





# அனுராதபுர நகரைச் சுத்தப்படுத்திய INSEE Ecocycle



இலங்கையில் கைத்தொழில் கழிவு முகாமைத்துவத்தில் முன்னோடியான INSEE Ecocycle 2024 மார்ச் 21 அன்று தனது 21 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடியுள்ளது.


தூய்மையான மற்றும் பசுமையான இலங்கையைக் கட்டியெழுப்புவதில் நிலைபேணத்தகு கழிவு முகாமைத்துவ சேவையை வழங்கும் அர்ப்பணிப்பில் செழுமையான பாரம்பரியத்தை இதன் மூலமாக வெளிப்படுத் தியுள்ளது.

இந்த முக்கியமான சாதனை இலக்கினைக் கௌரவிக்கும் வகையில், அனுராதபுரம் மாநகர சபை, பாடசாலை மாணவர்கள், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல அரச நிறுவனங்களுடன் ஒத்துழைத்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க அனுராதபுரம் நகரைச் சுத்தப்படுத்தும் நிகழ்வொன்றை INSEE Ecocycle அணி ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வையொட்டி, மாநகர சபையில் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு நிகழ்வொன்றும், நிலைபேணத்தகு கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு அமர்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

INSEE Ecocycle இன் நிறுவன சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமான இந்த முயற்சி, அனுராதபுரம் புராதன நகரத்தைச் சுத்தப்படுத்துவதற்கு ஒத்துழைப்பதில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சமூக ஈடுபாடு மற்றும் சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

# eVisa அறிமுகம்



புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள www.srilankaevisa.lk இணையத் தளம் ஊடாக இதற்கு முன்னரான மின்னணு பயண அங்கீகார (ETA) கட்டமைப்பு மேம்படுகின்றதுடன் இலங்கையின் விசா செயலாக்க முறைகள் பல அறிமுகமாகின்றது.

இந்த வலுவான மற்றும் அதிநவீன இணையத்தளமானது வெளிநாட்டிலிருந்து விசா விண்ணப்பிப் பவர்களுக்கு குறுகிய கால, நீண்ட கால, ட்ரான்சிட் விசா மற்றும் இலவச விசாக்கள் உட்பட 15 விசா வகைகள் உட்பட ஒரு மாதம் முதல் 10 ஆண்டுகள் வரை தங்கியிருப்பதற்கான விசாக்களை வழங்கும்.

இப்புதிய நடைமுறை திட்டமானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 17ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த விசா புதுப்பிப்பு திட்டமானது, விசா நடைமுறையை நவீனமயமாக்கும் மற்றும் இலங்கையை உலகளாவிய பயணத்திற்காக கேந்திர இடமாக நிலைநிறுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு உதவுகின்றது.

இதற்கு முன்னர் நுவுயு திட்டத்தின் கீழ் சார்க் நாடுகளில் இருந்து வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகள் 30 நாட்களுக்கான சுற்றுலா விசாவிற்கு மட்டுப்படுத்தப்பட்டனர்.

தற்போது மேம்படுத்தப்பட்டுள்ள புது விசா திட்டம் ஊடாக சார்க் நாடுகள் மற்றும் சார்க் அல்லாத நாடுகளுக்கு 6 மாத பிரிவின் கீழ் 60 நாட்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய டிஜிட்டல் தளம் ஊடாக மிக இலகுவாக விசாக்களை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

சீனா, இந்தியா, இந்தோனேஷியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய ஏழு நாடுகளுக்கு விசா அற்ற ஏற்பாடுகள் 2024 ஏப்ரல் 30 ம் திகதி வரை அமுலில் இருக்கும். மேலும், சிங்கப்பூர், மாலைத்தீவு, செக் குடியரசு மற்றும் சீஷெல்ஸில் இருந்து வருபவர்களுக்கு விசா விலக்கு உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.




# "Great Place To Work" சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள் பட்டியலில் HNB

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC> அதன் சிறப்பை நிரூபித்து, பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களின் வரிசையில் மீண்டும் இணைந்துள்ளது. பெருநிறுவன துறையில் உகந்த பணிச்சூழலைக் கொண்ட வணிகங்களை அங்கீகரித்து, அவ் நிறுவனங்களை ஆண்டுதோறும் Great Place to Work தரப்படுத்தலின் மூலம் மதிப்பீடு செய்வதன் ஊடாக 2024 ஆம் ஆண்டிற்கான இந்த கௌரவமான அங்கீகாரத்தை HNB FINANCE நிறுவனமும் பெற்றுள்ளது.

சர்வதேச அங்கீகாரத்துடன் புசுயுஏீடயஉந வழ றுழசமஇல், வணிக சூழல், பணியாளர் அனுபவம் மற்றும் பெருநிறுவன தலைமைத்துவ கண்ணோட்டம் போன்ற காரணிகள் தொடர்பாக நிறுவனத்திற்கும் ஊழியர் களுக்கும் இடையிலான பரஸ்பர ஒப்பந்தம் மற்றும் நம்பிக்கையின் மூலம் அந்த வணிகங்கள் அடைந்த முன்னேற்றம், அந்த வணிகங்களில் தங்கியிருக்கும் பணியாளர்கள் மற்றும் புத்தாக்க திறன்களின் வளர்ச்சி எப்படி நடந்தது என்பது குறித்து தணிக்கை நடத்தப்படும்.

HNB FINANCE PLC இன் இந்த சாதனை குறித்து அதன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு சமிந்த பிரபாத் கருத்துத் தெரிவிக்கையில், "நிதி நிறுவனமாக எங்களின் வெற்றி HNB FINANCE குடும்பத்தின் திறமை மற்றும் அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்களின் மீது தங்கியுள்ளது.

எனவே, சேவை அனுபவத்தை மிகச் சிறந்த மற்றும் உகந்த நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம், ஊழியர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் நாங்கள் தொடர்ந்து பராமரிக்க முடிந்தது. பல ஆண்டுகளாக Great Place To Work ஆக அங்கீகரிக்கப்பட்டதை இதற்குச் சுட்டிக்காட்டக்கூடிய சிறந்த உதாரணம் என்று கூறலாம்." என தெரிவித்தார்.

# DFCCஇற்கு தங்க விருது










டிஜிட்டல் புத்தாக்கத்தினூ டாக அனைவருக்கும் நிதியியல் வாய்ப்பினை வழங்கும் வழிமுறைகளை மேம்படுத்துவதில் DFCC tங்கியின் மகத்தான முயற்சிகளுக்கான அங்கீகாரமாக அண்மையில் இடம்பெற்ற LankaPay Technovation Awards விருதுகள் நிகழ்வில், நிதியியல் உள்ளடக்கம் – பிரிவு C இல் ஆண்டின் மிகச் சிறந்த நிதியியல் நிறுவனத்திற்காக (Financial Institution of the Year for Financial Inclusion) தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்புமிக்க பாராட்டுக்குப் புறம்பாக, பிரிவு டீ இல் ஆண்டின் மிகச் சிறந்த சாதாரண ஏடீஆ செயலூக்கத்திற்கான சிறப்பு விருதையும் (Best Common ATM Enabler)> DFCC வங்கி பெற்றுள்ளது. டிஜிட்டல் செயலூக்கத்தினூடாக அனைவருக்கும் நிதியியல் வாய்ப்புக்களை வழங்கி நிலைபேணத்தகு எதிர்காலத்தைச் செதுக்கி, 'அனைவருக்கும் ஏற்ற வங்கி' ஆகத் திகழ்வதில் DFCC வங்கியின் அர்ப்பணிப்பை இந்த விருதுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இச்சாதனை குறித்து DFCC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா அவர்கள் கருத்து வெளியிடுகையில், "இந்த மதிப்பிற்குரிய விருதுகளுடன் கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் எமக்கு மிகுந்த கௌரவம் அளிக்கின்றது.

மிகவும் மதிப்பிற்குரிய இந்த மேடையில் எமக்கு கிடைக்கப்பெற்ற முதலாவது தங்க விருதாக இது அமைந்துள்ளதுடன், DFCC வங்கியை அனைவருக்கும் ஏற்ற ஒரு முதன்மையான நிதியியல் நிறுவனமாக நிலைநிறுத்துவதற்காக உழைக்கின்ற பல்வேறு நபர்கள் மற்றும் அணிகளின் ஓயாத அர்ப்பணிப்பிற்கு சான்று பகருகின்றது என்று குறிப்பிட்டார்.

# Samsung மற்றும் UNDP ஆகியவை 2030 ற்கான நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கின்றன




COVID-19 ஆனது இப் புவியில் வாழ்ந்து வரக்கூடிய எமது சமூகத்திற்கு முன்னொருபோதுமே நிகழ்ந்திராத மோசமான சவால்களைக் கொண்டு வந்துள்ளது.அது மட்டும் அல்லாது 2015 முதற்கொண்டு அடைந்து வந்த முன்னேற்றங்களையும் மிகவும் பாதித்துள்ளது.

Samsung மற்றும் UNDP என்பன 2030 ற்கான நிகழ்ச்சி நிரலை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான பாதையில் தமது முழு கவனத்தையும் முடுக்கி விட்டுள்ளது. மேலும் அவை புதுமைகாண் கூட்டாண்மை பொறுப்புகளைத் திரட்டுவதோடு மட்டுமின்றி இப்புதிய சவால்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு கூட உலகளாவிய இலக்குகளின் சாதனைகளையும் கூட விரிவுபடுத்துகிறது.

2019 ஆம் ஆண்டில; Samsung மற்றும் UNDP கூட்டாண்மையானது ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து, UNDP ஆனது Samsung இன் தற்போதைய வளர்ச்சிப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் விழிப்புணர்வையும் மற்றும் நிதியையும் திரட்ட புதுமைகாண் தொழிநுட்பங்களையும் பயன்படுத்தியது.

Samsung Global Goals (SGG) App ஆனது 2030 இற்கான நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் காட்டுவதில் தனித்துவமானது, ஏனெனில் இது நிதி உருவாக்கத்தினை மேற்கொள்ளும்போது உலகளாவிய ரீதியில் இலக்குகளை அடைவது தொடர்பாக மிகவும் எளிய வழிகளை வழங்குகிறது.

ஏறத்தாழ நான்கு வருடங்களுக்கு முன்பாக SGG App ஆனது தொடங்கி வைக்கப்பட்ட நாளிலிருந்து UNDP ஆனது புதிய மற்றும் எப்போதும் பெருகிக் கொண்டே இருக்கும் அதன் அங்கத்தினர்களுக்கு வாய்ப்பினை வழங்கிய வண்ணமே இருக்கிறது.

இது தற்போது உலகம் பூராகவும் 300 மில்லியனுக்கும் அதிகமான சாதனங்களில் நிறுவப்பட்டுள்ளதோடு அது 89 மொழிகளிலும் கிடைக்கப் பெறுகிறது, ஆனால் இந்தியாவில் மட்டும் இது ஓர் முழுமையான தனிப்பயனாக்கப்பட்ட பதிப்பாகக் கிடைக்கிறது.



# CEA, MEPAவுடன் யூனிலீவர் ஒப்பந்தம்

யூனிலீவர் ஸ்ரீ லங்கா அதன் பரந்த நிலைபேறான தன்மை நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக, உள்நாட்டு சந்தையில் விற்பனையாகும் அதன் பிளாஸ்டிக்கின் 100மூ இற்கு சமமான பிளாஸ்டிக்கை சேகரிப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளது.

4 மில்லியன் இலங்கையர்களுக்கு குடிநீரை வழங்கும் களனி கங்கையின் சுத்திகரிப்பு மற்றும் அதன் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான யூனிலீவர், CEA,MEPA ஆகியவற்றுக்கு இடையேயான அரச – தனியார் பங்காளித்துவமானது முக்கிய உதவியாக அமையும். இது அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அலி தாரிக் இது குறித்து தெரிவிக்கையில், “பிளாஸ்டிக்குகளுக்கு ஒரு வட்டப் பொருளாதாரத்தை உருவாக்கும் எமது முயற்சியில், கடந்த 2 வருடங்களில் நாம் விற்பனை செய்த எமது தயாரிப்புகள் மூலமான பிளாஸ்டிக் கொள்ளளவின் 100% இற்கும் அதிகமான பிளாஸ்டிக்கை நாம் மீள சேகரித்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம்..

அந்த வகையில் அதனைத் தொடர்ந்து நாம் மேற்கொள்ளவுள்ள, களனி ஆற்றை சுத்தப்படுத்தும் கூட்டாண்மையானது, “பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கான விரிவான உற்பத்தியாளர் பொறுப்பு“ எனும் தேசிய நிகழ்ச்சி நிரலை ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பை செயற்படுத்துகிறது..” என்றார்.

# பணியாற்ற சிறந்த இடமாக Neptune Recyclers









பணியாற்ற சிறந்த இடம் எனும் சான்றிதழை பெற்றமை தொடர்பான அதன் உத்தியோகபூர்வ சான்றுப்படுத்தலை Neptune Recyclers நிறுவனம் பெருமையுடன் அறிவிபபதில் மகிழ்ச்சி அடைகின்றது.

இது எமது அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் மதிப்புமிக்க பின்னூட்டலின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட ஒரு முக்கிய அங்கீகாரமாகும்.

இந்த சான்றிதழானது எமது நிறுவனத்திற்கு ஒரு மைல்கல்லை அடையாளப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தனிநபர்களை பணியாளர்களாக மட்டும் கருதுவதையும் தாண்டி, மதிப்புமிக்க பங்களிப்பாளர்களாகவும் மரியாதை மற்றும் வலுவூட்டப்பட்டவர்களாகவும் இருக்கும் ஒரு பணியிடத்தை அவர்களுக்கு நிறுவுவதற்கு நாம் கொண்டுள்ள எமது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இது வலுப்படுத்துகிறது.

இந்த சான்றளிப்பு செயன்முறையானது, Neptune Recyclers ஒரு பணியிடம் என்பதையும் கடந்தது என்பதற்கு சான்றாக அமைகிறது.

இது ஒரு செழிப்புமிக்க சூழல்,இங்கு தொழில் வல்லுநர்கள் வெறுமனே வேலை செய்வதோடு மட்டுமல்லாமல், மேம்படுத்தப்படுகின்றனர்.

இங்கு பணியில் திருப்தி மற்றும் பணி நோக்கத்தின் கலாசாரம் வளர்க்கப்படுகின்றது. நம்பகத்தன்மை, மரியாதை, நேர்மை, தோழமை, பெருமை ஆகிய ஐந்து முக்கிய பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்ட நுணுக்கமான மதிப்பீட்டின் அடிப்படையில், Neptune Recyclers தமது பணியிட விசேடத்துவத்தின் முழுமையான அர்ப்பணிப்பை நிரூபித்துள்ளது.

# தேயிலை தொடர்பில் உலகளாவிய கலந்துரையாடல்




உலகலாவிய தேயிலைத் தொழிற் றுறையின் மிகப்பெரும் தலைவர் களை யும் புத்தாக்குநர்களையும் ஒன்றுதிரட்டி கொழும்பு சர்வதேச தேயிலை மாநாட் டினை 2024 ஜ்லை மாதம் 24-26 ஆம் திகதி வரையில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்றுறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான வலுவான பேச்சுவார்த்தைகள், ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் மற்றும் பசுமை நோக்கங்களுக்கான உயிர்ப்புமிகு உற்சாகத்தை வழங்கும் நோக்கில் நடாத்தப்படும் இம்மாநாடு கொழும்பு தேயிலை வர்த்தகர்களின் சங்கம் (ஊவுவுயு) மற்றும் இலங்கை தேயிலைச் சபை என்பன இணைந்து நடத்தும் மிக முக்கிய நிகழ்வாக அமைகின்றது.

1992 ஆம் ஆண்டு முதன்முறையாக நடாத்தப்பட்ட இம்மாநாடு இம்முறை தேயிலை: வாழ்வொழுங்கு மற்றும் வாழ்வாதாரம் என்ற சமகால கருப்பொருளின்கீழ் நடாத்தப்படுகிறது.

கென்யா, இலங்கை, சீனா, இந்தியா, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரி க்கா போன்ற நாடுகள் பலவற்றி லிருந்து தேயிலைப் பயிர் முதல் தேநீர் கோப்பை வரை ஒட்டுமொத்த உலகளாவிய தேயிலைப் பெறுமானச் சங்கி லியின் தொழிற்றுறை வல்லுநர்கள், நிபுணர்கள், முன்னணி வணிக நாமங் கள் மற்றும் சமூக நிறுவனங்கள் என்பவற்றை ஒன்றுசேர்க்கும் இந்த மாநாட்டின் சிறப்பம்சம் என்னவெனில், உலகளாவிய ரீதியில் தேயிலைத் தொழிற்றுறையின் சவால்கள் குறித்து அவதானம் செலுத்துவதாகும்.

# யூனியன் வங்கி கௌரவிப்பு



இலங்கையின் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் நாளிகைக்கான டயமன்ட் விருதுகள் 2023 நிகழ்வை அண்மையில் பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது.

“Unbreakable Brilliance>” (தகர்க்க முடியாத சிறப்பு) எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, பங்காண்மையின் வலிமை மற்றும் பாங்கசூரன்ஸ் துறையில் முன்னோடியாகத் திகழ் கின்றமைக்கான துரிதத் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

நிகழ்வில் இரு நிறுவனங்களினதும் நிறைவேற்று குழு அங்கத்தவர்கள், முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் அணி அங்கத்தவர்கள் பங்கேற்றிருந்ததுடன், யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் நாளிகையின் சாதனைகள் கௌரவிக்கப்பட்டது.

85க்கும் அதிகமான வெற்றியாளர்களின் சாதனைகள் கொண்டாடப்பட்டதுடன், 2023 டயமன்ட் விருதுகளின் பிரதான அங்கமாக, வெற்றியாளர்களுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது மற்றும் CEO’s Lounge போட்டிக்கு தகைமை பெற்ற அங்கத்தவர்கள் கௌரவிக்கப்பட்டமை போன்றவை அமைந்திருந்தன.

வெற்றியாளர்களுக்கு பல்வேறு பெறுமதியான பரிசுகள் வழங்கப்ப ட்டது.இதில் பணப் பரிசுகளுடன், வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகளும் அடங்கியிருந்தன.

சிறந்த வலய முகாமையாளருக்கான விருதை சமிந்த பெர்னான்டோ வெற்றியீட்டியதுடன், வலய முகாமையாளர் பிரிவில் உயர் கட்டண வருமான உருவாக்கத்துக்கான விருதை கசுன் டி சில்வா வெற்றியீட்டினார்.

வருடாந்த ஷீல்ட் சம்பியன் விருதை புறக்கோட்டை கிளை வெற்றியீட் டியதுடன், வரகாபொல, குளியாப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மொரட்டுவ, நாவல மற்றும் பொரளை ஆகிய கிளைகள் 2023 ஆம் ஆண்டுக்கான டயமன்ட் க்ளப் வெற்றியாளர்களாக கௌரவிக்கப்பட்டன.

# “தலையால் சிந்தியுங்கள்” சந்தைப்படுத்தல் பிரசாரம்

இலங்கையில் மோட்டார் சைக்கிள் தலைக்கவச பாதுகாப்பு தொடர்பில் முன்னணியில் உள்ள SHAKO தலைக்கவசம், பாதுகாப்பு, சௌகரியம், ஸ்டைல் ஆகிய 3 முக்கிய கூறுகளின் அடிப்படையில் புதிய தரத்தில் தயாரிக்கப்பட்ட, புதிய SHAKO தலைக்கவச வரிசையை சந்தைக்கு அறிமுகப்படுத்துகிறது.

SHAKO இலங்கை மக்களை ”தலையால் சிந்தியுங்கள்” எனும் சந்தைப்படுத்தல் பிரசாரத்தின் மூலம் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அறிவுறுத்துகிறது.

மேலும், பாதுகாப்பான தலைக்கவசம் தொடர்பான அவர்களது தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ள SHAKO தலைக்கவசங்கள், அதற்கான விசேடத்துவம் மற்றும் அர்ப்பணிப்புடன் தலைக்கவசத் துறையில் முன்னணியில் திகழ்கிறது.

பெருமைக்குரிய ளுவயககழசன குழுமத்தில் அங்கம் வகிக்கும் Inventive Polymers Lanka நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு உள்ளக தர சோதனைகள் மூலம் SHAKO தலைக்கவசங்கள் தரத்தை மேலும் உறுதி செய்கின்றன.

அத்துடன் ளுடுளு சான்றிதழுடன் வரும் ஒவ்வொரு SHAKO தலைக் கவசங்களும் புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தயாரிக் கப்படுகிறது. வீதியில் நம் பகமான பாதுகாப்பை உறுதி செய்யும் SHAKO தலைக்கவசங்களின் ஒவ்வொரு அம்சமும் ஒப்பிடமுடியாத பாதுகாப்பையும், மோட்டார் சைக்கிளை செலுத்தும் ஒவ்வொருவருவருக்கும் மன அமைதியுடன் சவாரி செய்யும் வசதியையும் உறுதி செய்கிறது.




# ‘SOS Wonder Village’ நிகழ்வு

கொழும்பு One Galle Face Mall உடன் கைகோர்த்து இலங்கை SOS சிறுவர் கிராமங்கள், SOS Wonder Village நிகழ்வை முன்னெடுத்திருந்தது. தேவைகளைக் கொண்ட சிறுவர்களின் நலனுக்காக நிதி திரட்டுவது மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையாக இது அமைந்திருந்தது.

SOS Wonder Village நிகழ்வு கொழும்பிலுள்ள One Galle Face Mall இல் மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் ஏப்ரல் வாரம் முற்பகுதி வரை வார இறுதி நாட்களில் நான்காம் மாடியிலுள்ள Playscape பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த காலப்பகுதியில், 1000 க்கும் அதிகமான சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள; SOS Wonder Village இல் இணைந்து, களிப்பான விநோத அம்சங்களில் பங்கேற்றிருந்தனர். இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்ததனூடாக விநோத அம்சங்களை அனுபவித்தது மட்டுமன்றி, சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான பங்களிப்புகளையும் வழங்கியிருந்தனர்.




சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான வர்ணம் பூசும் அமர்வுகளை விருந்தினர்கள் அனுபவித்திருந்தனர். சிங்கிதி அவுருது குமார மற்றும் குமாரிய தெரிவும் நடைபெற்றது. பல உள்ளக விளையாட்டுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விளையாட்டுகளில் பங்கேற்று வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்பட்டன. SOS சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மாதாந்த அல்லது வருடாந்த செலவுகளுக்கான தொகையை அனுசரணை வழங்குவதற்கான வாய்ப்பு பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது..

இந்தத் தொகை சிறுவரின் கல்வி மற்றும் வாழ்க்கைச் செலவுகளை ஈடு செய்ய பயன்படுத்தப்படும். மேலும், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பயில்வதற்கு பங்குபற்றுநர்களுக்கு வாய்ப்பு கிடைத்ததுடன், சிறுவர் வீடியோக்கள், கார்டூன்கள் மற்றும் பாடல்களை அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

# கம்போடியா,இலங்கை மற்றும் பங்களாதேஷில் Kaspersky

உலகளாவிய இணையப் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தனியுரிமை நிறுவனமான முயளிநசளமல,இலங்கை, கம்போடியா மற்றும் பங்களாதேஷ் உட்பட ஆசிய பசிபிக்கிலுள்ள (APAC) புதிய பிரதேசங்களில் அதன் விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த மூலோபாய நடவடிக்கையானது, பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் முழுவதும், குறிப்பாக நிறுவன இணையப் பாதுகாப்பு சந்தையில் டிஜிட்டல் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நிறுவனத்தின் பணியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை இது குறிக்கிறது.

இணைய அச்சுறுத்தல்கள் உலகளவில் தொடர்ந்து உருவாகி, பெருகி வருவதால், முயளிநசளமல அதன் முழுமையான இணையப் பாதுகாப்பு தீர்வுகள் சேவைகளை APAC இல் வளர்ந்து வரும் சந்தைகளுக்கு விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தைக் கொண்டுள்ளது.

புத்தாக்கமான தீர்வுகள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதில் நிரூபிக்கப்பட்ட சாதனையுடன், கம்போடியா, இலங்கை மற்றும் பங்களாதேஷில் தனிநபர்கள், அரசாங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இணைய பாதுகாப்பு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள நிறுவனம் தயாராக உள்ளது.

” இலங்கை, கம்போடியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் எங்களது விரிவாக்கமானது, அதிகரித்து வரும் இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஆசியா பசிபிக்கின் பரந்த ஊலடிநசளிநசநஜப் பாதுகாப்பதில் எங்களின் உறுதியான அர்ப்பணிப்பை இது காட்டுகிறது” என முயளிநசளமலஇன் ஆசியா பசிபிக் முகாமைத்துவப் பணிப்பாளர் Adrian Hia கூறினார்.


# இலங்கைக்கு நம்பிக்கையை ஏற்பகுத்தவுள்ள Rotary International District 3220 மாநாடு

Rotary நாட்காட்டியின் முக்கிய நிகழ்வான Rotary International District 3220 மாநாடு 2024 இல் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து 400க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்கள் மற்றும் பலவிசேட பிரமுகர்கள் மற்றும் பேச்சாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

Rotary International என்பது 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் 1.2 மில்லியன் பெருநிறுவன தலைவர்களை உள்ளடக்கிய உலகளாவிய வலையமைப்பென்பதுடன், இது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கும் அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றது.

Rotary அமைப்பானது போலியோ, எச்.ஐ. விஃஎய்ட்ஸ் மற்றும் மலேரியா போன்ற உயிருக்கு ஆபத்தான நோய்களின் பரவலைத் தடுக்க சமூகங்களுக்கு விழிப்பூட்டி ஆதரவளிக்கின்றது.

அதே நேரத்தில் உலகெங்கிலும் உள்ள வளரும் பகுதிகளில் குறைந்த விலை மற்றும் இலவச சுகாதார சேவைக்கான அணுகலை மேம்படுத்தி விரிவுபடுத்துகிறது.




அத்தோடு உலகில் உள்ள அமைப்பு நாடுகளிடையே அமைதி மற்றும் நல்லெண்ணத்தை மேம்படுத்துவதில் அதன் பங்கிற்காக ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர இருக்கை வழங்கப்பட ஒரேயொரு சேவை அமைப்பு இதுவாகும்.

Rotary International District 3220 Sri Lanka and Maldives என்பது 2,100க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்கள், 8,000 ரோட்டராக்டர்கள் மற்றும் 7,000 இன்டராக்டர்களைக் கொண்ட வலையமைப்பாகும். 1929 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, Rotary International District 3220 Sri Lanka and Maldives> இலங்கையில் போலியோவை வெற்றிகரமாக ஒழித்தமை, 2004 சுனாமியைத் தொடர்ந்து 24 பாடசாலைகளை புனரமைத்தமை, லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் மனித இதய வால்வு வங்கியை அமைத்தமை , கண்டியில் ஊனமுற்றோருக்கான நிலையத்தின் அபிவிருத்தி, வறண்ட வலயத்தில் எதிர்திசை சவ்வூடுபரவல் (RO) தொகுதிகளை வழங்கியமை மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள புற்றுநோய் ஆரம்ப கண்டறிதல் மையத்திற்கு டிஜிட்டல் மெமோகிராபி அமைப்பை வழங்கியமை போன்ற பல முக்கிய சமுதாய, சமூக மற்றும் பொருளா தார்றியுள்ளது.